# *வை துவ் பூ சா ( போதிசத்துவ ஸ்கந்தன் )*

**ஆங்கிலத்தில் மூலக் கட்டுரை :- போதிசத்துவ ஸ்கந்தனைப் பற்றிய ஒரு கட்டுரை** *(Wei Tuo Pú sà-* **Bodhisattva Skanda in China -illustrated research note** *)*

***தமிழில் மொழி பெயர்ப்பு :- சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com)***

**சீன தேசத்தினர் வழிபடும் பௌத மதத்தில் தங்களை இரட்சிக்கும் கடவுளாகக் கருதப் படும் எட்டு பேர்களில் ஒருவரே வை-துவ்-பூ-சா ( போதிசத்துவ ஸ்கந்தன் ) என்பவர். அவர்களுடைய படையின் சிறப்பு மிக்க சேனாதிபதியாகக் கருதப் படுபவன் அவன். கௌதம புத்தர் தான் முக்தி அடையும் முன் ( நிர்வாணம் அடைந்த பொழுது ) அந்தப் படைத் துலவனை அழைத்து புத்த மதத்தின் தர்மங்களைக் காக்கும்படி அவருக்கு ஆணையிட்டார். புத்தரின் மறைவிற்குப் பின் துர் தேவதைகள் அவருடைய புனிதச் சின்னங்களை அபகரித்துக் கொண்டு ஓடிச் சென்ற பொழுது, போதிசத்துவத்வனான வை-துவ், அவர்களை பிடித்து வந்து புத்தரின் புனிதச் சின்னங்களை அவர்களிடம் இருந்து மீட்டு வந்தார். புத்த மதத்தின் மடாலயங்கள், அதன் செல்வங்கள், அதன் தர்மங்கள் போன்ற அனைத்தையும் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு இருந்தவரே வை- துவ்- பூ- சா என்பவர். சீனாவில் ஹினன் மாகாணத்தில் உள்ள லுயோ யாங்க் எனும் இடத்தில் மிகப் பழைமையானதும் ஆயிரம் ஆண்டுகள் பெருமை வாய்ந்ததுமான வெள்ளை நிறக் குதிரையை அடயாளமாகக் கொண்டிருந்த பைமா என்ற புத்த மடாலயமே முதலில் தோன்றியது.** ( Baima (White Horse Monastery in Luoyang, Henan province) .



ஒரு புராணக் கதையின்படி புத்த மதத்தின் வேதப் புத்தகங்களை ஒரு வெள்ளைக் குதிரை சுமந்து கொண்டு இருந்ததினால் அந்த புத்த மடாலயத்திற்கு அந்தப் பெயர் வந்தது எனத் தெரிகின்றது.

புத்த மதத்தைத் தழுவியவர்கள் பைமா மடாலயமே தங்களுடைய புனிதமான பூர்வீக ஆலயம் எனவும், அங்கிருந்துதான் சீனாவில் புத்த மதம் வேர் ஊன்றத் தொடங்கியது என்பதாகவும் நம்புகின்றனர். வை - துவ் - பூ - சாவின் ( போதிசத்துவ ஸ்கந்தன் ) இரண்டு ஆள் உயரச் சிலைகள் பைமா மடாலயத்தில் மற்ற கடவுள் சிலைகளுடன் வைக்கப் பட்டு உள்ளன.



பைமா மடாலயத்தில் ஸ்கந்தன்



சீனாவில், ஷுவான்ங்லின் ஆலயத்தில் உள்ள வண்ணமயமான ஸ்கந்தின் சிற்பம்



வை-துவ்-பூ-சா ( போதிசத்துவ ஸ்கந்தன் )